ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

பேயாழ்வார் அருளிச்செய்த

# மூன்றாம் திருவந்தாதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# மூன்றாம் திருவந்தாதி

## தனியன்

**சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள் ⋆**
**காரார் கருமுகிலைக் காணப்புக்கு ⋆**
**ஓராத் திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே ⋆**
**உரைக்கண்டாய் நெஞ்சே ! உகந்து**

‡ திருக் கண்டேன் ⋆
பொன் மேனி கண்டேன் ⋆
திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன் ⋆
செருக் கிளரும் பொன் ஆழி கண்டேன் ⋆
புரி சங்கம் கைக் கண்டேன் ⋆
என் ஆழி வண்ணன்பால் இன்று ‖ **1** ‖

இன்றே கழல் கண்டேன் ⋆
ஏழ் பிறப்பும் யான் அறுத்தேன் ⋆
பொன் தோய் வரை மார்பில் பூந் துழாய் ⋆
அன்று திருக் கண்டு கொண்ட ⋆
திருமாலே ⋆
உன்னை மருக்கண்டு கொண்டென் மனம் ‖ **2** ‖

மனத்துள்ளான் ⋆
மா கடல் நீர் உள்ளான் ⋆
மலராள் தனத்துள்ளான் ⋆

தண் துழாய் மார்பன் ⋆
சினத்துச் செருநர் உகச் செற்றுகந்த ⋆
தேங்கோத வண்ணன் ⋆
வரு நரகம் தீர்க்கும் மருந்து ‖ **3** ‖

மருந்தும் பொருளும் ⋆
அமுதமும் தானே ⋆
திருந்திய செங்கண் மால் ஆங்கே ⋆
பொருந்தியும் நின்றுலகம் உண்டுமிழ்ந்தும் ⋆
நீர் ஏற்று மூவடியால் ⋆
அன்றுலகம் தாயோன் அடி ‖ **4** ‖

அடி வண்ணம் தாமரை ⋆
அன்றுலகம் தாயோன் ⋆
படி வண்ணம் பார்க் கடல் நீர் வண்ணம் ⋆
முடி வண்ணம் ஓர் ஆழி வெய்யோன் ⋆
ஒளியும் அஃதன்றே ⋆
ஆர் ஆழி கொண்டாற்கழகு ‖ **5** ‖

அழகன்றே ஆழியாற்கு ⋆
ஆழி நீர் வண்ணம் ⋆
அழகன்றே அண்டம் கடத்தல் ⋆
அழகன்றே அங்கை நீர் ஏற்றாற்கு ⋆
அலர் மேலோன் கால் கழுவ ⋆
கங்கை நீர் கான்ற கழல் ‖ **6** ‖

கழல் தொழுதும் வா நெஞ்சே ! ⋆
கார்க் கடல் நீர் வேலைப் ⋆
பொழில் அளந்த புள் ஊர்திச் செல்வன் ⋆

எழில் அளந்தங்கெண்ணற்கரியானை ⋆
எப் பொருட்கும் சேயானை ⋆
நண்ணற்கரியானை நாம் ‖ **7** ‖

நாமம் பல சொல்லி ⋆
நாராயணா என்று ⋆
நாம் அங்கையால் தொழுதும் நன்னெஞ்சே ! வா ⋆
மருவி மண்ணுலகம் உண்டுமிழ்ந்த ⋆
வண்டறையும் தண் துழாய் ⋆
கண்ணனையே காண்க நங்கண் ‖ **8** ‖

கண்ணும் கமலம் ⋆
கமலமே கைத்தலமும் ⋆
மண் அளந்த பாதமும் மற்றவையே ⋆
எண்ணின் கருமா முகில் வண்ணன் ⋆
கார்க் கடல் நீர் வண்ணன் ⋆
திருமாமணி வண்ணன் தேசு ‖ **9** ‖

தேசும் திறலும் ⋆
திருவும் உருவமும் ⋆
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் பேசில் ⋆
வலம் புரிந்த வான் சங்கம் ⋆
கொண்டான் பேர் ஓத ⋆
நலம் புரிந்து சென்றடையும் நன்கு ‖ **10** ‖

நன்கோதும் ⋆
நால் வேதத்துள்ளான் ⋆
நறவிரியும் பொங்கோதருவிப் புனல் வண்ணன் ⋆
சங்கோதப் பாற்கடலான் ⋆

பாம்பணையின் மேலான் ⋆
பயின்றுரைப்பார் நூற் கடலான் நுண் அறிவினான் ॥ **11** ॥

அறிவென்னும் தாள் கொளுவி ⋆
ஐம்புலனும் தம்மில் ⋆
செறிவென்னும் திண் கதவம் செம்மி ⋆
மறை என்றும் நன்கோதி ⋆
நன்குணர்வார் காண்பரே ⋆
நாள்தோறும் பைங்கோத வண்ணன் படி ॥ **12** ॥

படி வட்டத் தாமரை ⋆
பண்டுலகம் நீர் ஏற்று ⋆
அடி வட்டத்தால் அளப்ப நீண்ட முடி வட்டம் ⋆
ஆகாயம் ஊடறுத்து ⋆
அண்டம் போய் நீண்டதே ⋆
மா காயமாய் நின்ற மாற்கு ॥ **13** ॥

மாற்பால் மனம் சுழிப்ப ⋆
மங்கையர் தோள் கைவிட்டு ⋆
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் ⋆
நால் பால வேதத்தான் வேங்கடத்தான் ⋆
விண்ணோர் முடிதோயும் ⋆
பாதத்தான் பாதம் பணிந்து ॥ **14** ॥

பணிந்துயர்ந்த பௌவப் ⋆
படு திரைகள் மோத ⋆
பணிந்த பண மணிகளாலே அணிந்து ⋆
அங்கனந்தன் அணைக் ⋆

கிடக்கும் அம்மான் ⋆
அடியேன் மனந்தன் அணைக் கிடக்கும் வந்து ‖ **15** ‖

வந்துதைத்த வெண் திரைகள் ⋆
செம் பவளம் வெண் முத்தம் ⋆
அந்தி விளக்கும் அணி விளக்காம் ⋆
எந்தை ஒருவல்லித் தாமரையாள் ⋆
ஒன்றிய சீர் மார்வன் ⋆
திருவல்லிக்கேணியான் சென்று ‖ **16** ‖

சென்ற நாள் செல்லாத ⋆
செங்கண் மால் எங்கள் மால் ⋆
என்ற நாள் எந் நாளும் நாள் ஆகும் ⋆
என்றும் இறவாத எந்தை ⋆
இணை அடிக்கே ஆளாய் ⋆
மறவாது வாழ்த்துக என் வாய் ‖ **17** ‖

வாய் மொழிந்து வாமனனாய் ⋆
மாவலிபால் ⋆
மூவடி மண் நீ அளந்து கொண்ட நெடுமாலே ⋆
தாவிய நின் எஞ்சா இணை அடிக்கே ⋆
ஏழ் பிறப்பும் ஆளாகி ⋆
அஞ்சாதிருக்க அருள் ‖ **18** ‖

அருளாதொழியுமே ⋆
ஆல் இலைமேல் ⋆
அன்று தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான் ⋆
இருளாத சிந்தையராய்ச் சேவடிக்கே ⋆

செம் மலர் தூய்க் கை தொழுது ⋆
முந்தையராய் நிற்பார்க்கு முன் ‖ **19** ‖

முன் உலகம் ⋆
உண்டுமிழ்ந்தாய்க்கு ⋆
அவ்வுலகம் ஈர் அடியால் ⋆
பின் அளந்து கோடல் பெரிதொன்றே ⋆
என்னே திருமாலே ! ⋆
செங்கணெடியானே ⋆
எங்கள் பெருமானே ! நீ இதனைப் பேசு ‖ **20** ‖

பேசுவார் ⋆
எவ்வளவு பேசுவர் ⋆
அவ்வளவே வாச மலர்த் துழாய் மாலையான் ⋆
தேசுடைய சக்கரத்தான் ⋆
சங்கினான் சார்ங்கத்தான் ⋆
பொங்கரவ வக்கரனைக் கொன்றான் வடிவு ‖ **21** ‖

வடிவார் முடி கோட்டி ⋆
வானவர்கள் ⋆
நாளும் கடியார் மலர் தூவிக் காணும் படியானை ⋆
செம்மையால் உள் உருகிச் ⋆
செவ்வனே நெஞ்சமே ⋆
மெய்ம்மையே காண விரும்பு ‖ **22** ‖

விரும்பி விண் மண் அளந்த ⋆
அஞ்சிறைய வண்டார் ⋆
சுரும்பு தொளையில் சென்றூத ⋆
அரும்பும் புனந் துழாய் மாலையான் ⋆

பொன்னங்கழற்கே ⋆
மனம் துழாய் மாலாய் வரும் ॥ **23** ॥

வருங்கால் இரு நிலனும் ⋆
மால் விசும்பும் காற்றும் ⋆
நெருங்கு தீ நீர் உருவும் ஆனான் ⋆
பொருந்தும் சுடர் ஆழி ⋆
ஒன்றுடையான் சூழ் கழலே ⋆
நாளும் தொடர் ஆழி நெஞ்சே ! தொழுது ॥ **24** ॥

தொழுதால் பழுதுண்டே ⋆
தூ நீர் உலகம் ⋆
முழுதுண்டு மொய் குழலாள் ஆய்ச்சி ⋆
விழுதுண்ட வாயானை ⋆
மால் விடை ஏழ் செற்றானை ⋆
வானவர்க்கும் சேயானை நெஞ்சே ! சிறந்து ॥ **25** ॥

சிறந்த என் சிந்தையும் ⋆
செங்கண் அரவும் ⋆
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும் ⋆
உறைந்ததுவும் வேங்கடமும் வெஃகாவும் ⋆
வேளுக்கைப் பாடியுமே ⋆
தாம் கடவார் தண் துழாயார் ॥ **26** ॥

ஆரே துயர் உழந்தார் ⋆
துன்புற்றார் ஆண்டையார் ⋆
காரே மலிந்த கருங்கடலை ⋆
நேரே கடைந்தானைக் காரணனை ⋆

நீர் அணைமேல் ⋆
பள்ளி அடைந்தானை நாளும் அடைந்து ‖ **27** ‖

அடைந்ததரவணைமேல் ⋆
ஐவர்க்காய் ⋆
அன்று மிடைந்தது பாரத வெம் போர் ⋆
உடைந்ததுவும் ஆய்ச்சி பால் மத்துக்கே ⋆
அம்மனே ⋆
வாள் எயிற்றுப் பேய்ச்சி பால் உண்ட பிரான் ‖ **28** ‖

பேய்ச்சி பால் உண்ட ⋆
பெருமானைப் பேர்ந்தெடுத்து ⋆
ஆய்ச்சி முலை கொடுத்தாள் அஞ்சாதே ⋆
வாய்த்த இருள் ஆர் திருமேனி ⋆
இன் பவளச் செவ்வாய் ⋆
தெருளா மொழியானைச் சேர்ந்து ‖ **29** ‖

சேர்ந்த திருமால் ⋆
கடல் குடந்தை வேங்கடம் ⋆
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும் ⋆
வாய்ந்த மறை பாடகம் அனந்தன் ⋆
வண் துழாய்க் கண்ணி ⋆
இறைபாடி ஆய இவை ‖ **30** ‖

இவை அவன் கோயில் ⋆
இரணியனதாகம் ⋆
அவை செய்தரி உருவம் ஆனான் ⋆
செவி தெரியா நாகத்தான் ⋆

நால் வேதத்துள்ளான் ⋆
நறவேற்றான் பாகத்தான் பாற்கடல் உளான் ‖ **31** ‖

பாற்கடலும் வேங்கடமும் ⋆
பாம்பும் பனி விசும்பும் ⋆
நூற் கடலும் நுண் நூல தாமரை மேல் ⋆
பாற்பட்டிருந்தார் மனமும் ⋆
இடமாகக் கொண்டான் ⋆
குருந்தொசித்த கோபாலகன் ‖ **32** ‖

பாலகனாய் ⋆
ஆல் இலைமேல் பைய ⋆
உலகெல்லாம் மேல் ஒருநாள் ⋆
உண்டவனே மெய்ம்மையே ⋆
மாலவனே மந்தரத்தால் ⋆
மா நீர்க் கடல் கடைந்து ⋆
வான் அமுதம் அந்தரத்தார்க்கீந்தாய் நீ அன்று ‖ **33** ‖

அன்றிவ் வுலகம் ⋆
அளந்த அசைவேகொல் ⋆
நின்றிருந்து வேளுக்கை நீள் நகர்வாய் ⋆
அன்று கிடந்தானைக் ⋆
கேடில் சீரானை ⋆
முன் கஞ்சைக் கடந்தானை நெஞ்சமே ! காண் ‖ **34** ‖

காண் காண் என ⋆
விரும்பும் கண்கள் ⋆
கதிர் இலகு பூண்டார் அகலத்தான் பொன் மேனி ⋆
பாண் கண் தொழில் பாடி ⋆

வண்டறையும் தொங்கலான் ⋆
செம் பொன் கழல் பாடி யாம் தொழுதும் கை ‖ **35** ‖

கைய கனல் ஆழி ⋆
கார்க் கடல் வாய் வெண் சங்கம் ⋆
வெய்ய கதை சார்ங்கம் வெஞ்சுடர் வாள் ⋆
செய்ய படை பரவை பாழி ⋆
பனி நீர் உலகம் ⋆
அடி அளந்த மாயன் அவற்கு ‖ **36** ‖

அவற்கடிமைப் பட்டேன் ⋆
அகத்தான் புறத்தான் ⋆
உவர்க்கும் கருங்கடல் நீர் உள்ளான் ⋆
துவர்க்கும் பவள வாய்ப் பூமகளும் ⋆
பல் மணி பூண் ஆரம் ⋆
திகழும் திருமார்பன் தான் ‖ **37** ‖

தானே தனக்குவமன் ⋆
தன் உருவே எவ் வுருவும் ⋆
தானே தவ உருவும் தாரகையும் ⋆
தானே எரி சுடரும் மால் வரையும் ⋆
எண் திசையும் ⋆
அண்டத்திரு சுடரு மாய இறை ‖ **38** ‖

இறை ஆய் நிலன் ஆகி ⋆
எண் திசையும் தானாய் ⋆
மறையாய் மறைப் பொருளாய் வானாய் ⋆
பிறை வாய்ந்த வெள்ளத்தருவி ⋆

விளங்கொலி நீர் வேங்கடத்தான் ⋆
உள்ளத்தின் உள்ளே உளன் ॥ **39** ॥

உளன் கண்டாய் நன்னெஞ்சே ! ⋆
உத்தமன் என்றும் உளன் கண்டாய் ⋆
உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய் ⋆
விண் ஒடுங்கக் கோடுயரும் ⋆
வீங்கருவி வேங்கடத்தான் ⋆
மண் ஒடுங்கத் தான் அளந்த மன் ॥ **40** ॥

மன்னு மணி முடி நீண்டு ⋆
அண்டம் போய் எண் திசையும் ⋆
துன்னு பொழில் அனைத்தும் சூழ் கழலே ⋆
மின்னை உடையாகக் கொண்டு ⋆
அன்றுலகளந்தான் ⋆
குன்றும் குடையாக ஆகாத்த கோ ॥ **41** ॥

கோவலனாய் ⋆
ஆ நிரைகள் மேய்த்துக் குழல் ஊதி ⋆
மா வலனாய்க் கீண்ட மணி வண்ணன் ⋆
மேவி அரி உருவம் ஆகி ⋆
இரணியனதாகம் ⋆
தெரி உகிரால் கீண்டான் சினம் ॥ **42** ॥

சின மா மத களிற்றின் ⋆
திண் மருப்பைச் சாய்த்து ⋆
புன மேய பூமி அதனை ⋆
தனமாகப் பேர் அகலத்துள்ளொடுக்கும் ⋆

பேர் ஆர மார்வனார் ⋆
ஓர் அகலத்துள்ளதுலகு ‖ **43** ‖

உலகமும் ⋆
ஊழியும் ஆழியும் ⋆
ஒண் கேழ் அலர் கதிரும் செந்தீயும் ஆவான் ⋆
பல கதிர்கள் பாரித்த ⋆
பைம் பொன் முடியான் அடி இணைக்கே ⋆
பூரித்தென் நெஞ்சே புரி ‖ **44** ‖

புரிந்து மத வேழம் ⋆
மாப் பிடியோடூடி ⋆
திரிந்து சினத்தால் பொருது ⋆
விரிந்த சீர் வெண் கோட்டு ⋆
முத்துதிர்க்கும் வேங்கடமே ⋆
மேல் ஒருநாள் மண் கோட்டுக் கொண்டான் மலை ‖ **45** ‖

மலை முகடு மேல் வைத்து ⋆
வாசுகியைச் சுற்றி ⋆
தலை முகடு தான் ஒரு கை பற்றி ⋆
அலை முகட்டண்டம் போய் நீர் தெறிப்ப ⋆
அன்று கடல் கடைந்தான் ⋆
பிண்டமாய் நின்ற பிரான் ‖ **46** ‖

நின்ற பெருமானே ! ⋆
நீர் ஏற்று ⋆
உலகெல்லாம் சென்ற பெருமானே ! செங்கண்ணா ⋆
அன்று துரக வாய் கீண்ட ⋆

துழாய் முடியாய் ⋆
நங்கள் நரக வாய் கீண்டாயும் நீ ‖ **47** ‖

நீ அன்றே நீர் ஏற்று ⋆
உலகம் அடி அளந்தாய் ⋆
நீ அன்றே நின்று நிரை மேய்த்தாய் ⋆
நீ அன்றே மா வாயுரம் பிளந்து ⋆
மா மருதின் ஊடு போய் ⋆
தேவாசுரம் பொருதாய் செற்று ‖ **48** ‖

செற்றதுவும் ⋆
சேரா இரணியனை ⋆
சென்றேற்றுப் பெற்றதுவும் ⋆
மா நிலம் பின்னைக்காய் ⋆
முற்றல் முரி ஏற்றின் ⋆
முன் நின்று மொய்ம்பொழித்தாய் ⋆
மூரிச் சுரியேறு சங்கினாய் ! சூழ்ந்து ‖ **49** ‖

சூழ்ந்த துழாய் அலங்கல் ⋆
சோதி மணி முடி மால் ⋆
தாழ்ந்த அருவித் தட வரைவாய் ⋆
ஆழ்ந்த மணி நீர்ச் சுனை வளர்ந்த ⋆
மா முதலை கொன்றான் ⋆
அணி நீல வண்ணத்தவன் ‖ **50** ‖

அவனே அரு வரையால் ⋆
ஆ நிரைகள் காத்தான் ⋆
அவனே அணி மருதம் சாய்த்தான் ⋆
அவனே கலங்காப் பெரு நகரம் ⋆

காட்டுவான் கண்டீர் ⋆
இலங்கா புரம் எரித்தான் எய்து ॥ **51** ॥

எய்தான் மராமரம் ⋆
ஏழும் இராமனாய் ⋆
எய்தான் அம் மான் மறியை ஏந்திழைக்காய் ⋆
எய்ததுவும் தென் இலங்கைக் கோன் வீழ ⋆
சென்று குறள் உருவாய் ⋆
முன் நிலம் கைக் கொண்டான் முயன்று ॥ **52** ॥

முயன்று தொழு நெஞ்சே ! ⋆
மூரி நீர் வேலை ⋆
இயன்ற மரத்தால் இலையின் மேலால் ⋆
பயின்றங்கோர் மண் நலம் கொள் வெள்ளத்து ⋆
மாயக் குழவியாய் ⋆
தண் அலங்கல் மாலையான் தாள் ॥ **53** ॥

தாளால் சகடம் ⋆
உதைத்துப் பகடுந்தி ⋆
கீளா மருதிடை போய்க் கேழலாய் ⋆
மீளாது மண் அகலம் கீண்டு ⋆
அங்கோர் மாதுகந்த மார்வற்கு ⋆
பெண் அகலம் காதல் பெரிது ॥ **54** ॥

பெரிய வரை மார்பில் ⋆
பேர் ஆரம் பூண்டு ⋆
கரிய முகிலிடை மின் போல ⋆
திரியுங்கால் பாண் ஒடுங்க ⋆

வண்டறையும் பங்கயமே ⋆
மற்றவன் தன் நீள் நெடுங்கண் காட்டும் நிறம் ॥ **55** ॥

நிறம் வெளிது செய்து ⋆
பசிது கரிதென்று ⋆
இறை உருவம் யாம் அறியோம் எண்ணில் ⋆
நிறைவுடைய நா மங்கை தானும் ⋆
நலம் புகழ வல்லளே ⋆
பூ மங்கை கேள்வன் பொலிவு ॥ **56** ॥

பொலிந்திருண்ட கார் வானில் ⋆
மின்னே போல் தோன்றி ⋆
மலிந்து திருவிருந்த மார்வன் ⋆
பொலிந்து கருடன் மேல் கொண்ட ⋆
கரியான் கழலே ⋆
தெருடன்மேல் கண்டாய் தெளி ॥ **57** ॥

தெளிந்த சிலாதலத்தின் ⋆
மேல் இருந்த மந்தி ⋆
அளிந்த கடுவனையே நோக்கி ⋆
விளங்கிய வெண் மதியம் ⋆
தா என்னும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் மண் மதியில் கொண்டுகந்தான் வாழ்வு ॥ **58** ॥

வாழும் வகை அறிந்தேன் ⋆
மை போல் நெடு வரைவாய் ⋆
தாழும் அருவி போல் தார் கிடப்ப ⋆
சூழும் திரு மா மணி வண்ணன் ⋆

செங்கண் மால் ⋆
எங்கள் பெருமான் அடி சேரப் பெற்று ॥ **59** ॥

பெற்றம் பிணை மருதம் ⋆
பேய் முலை மாச் சகடம் ⋆
முற்றக் காத்தூடு போய் உண்டுதைத்து ⋆
கற்றுக் குணிலை ⋆
விளங்கனிக்குக் கொண்டெறிந்தான் ⋆
வெற்றிப் பணிலம் வாய் வைத்துகந்தான் பண்டு ॥ **60** ॥

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ॥ **61** ॥

விண்ணகரம் வெஃகா ⋆
விரி திரை நீர் வேங்கடம் ⋆
மண் நகரம் மா மாட வேளுக்கை ⋆
மண்ணகத்த தென் குடந்தை ⋆
தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி ⋆
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு ॥ **62** ॥

தாழ் சடையும் நீள் முடியும் ⋆
ஒண் மழுவும் சக்கரமும் ⋆
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால் ⋆
சூழும் திரண்டருவி பாயும் ⋆

திருமலை மேல் எந்தைக்கு ⋆
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து ॥ **63** ॥

இசைந்த அரவமும் ⋆
வெற்பும் கடலும் ⋆
பசைந்தங்கமுது படுப்ப ⋆
அசைந்து கடைந்த வருத்தமோ ⋆
கச்சி வெஃகாவில் ⋆
கிடந்திருந்து நின்றதுவும் அங்கு ॥ **64** ॥

அங்கற்கிடர் இன்றி ⋆
அந்திப் பொழுதத்து ⋆
மங்க இரணியனதாகத்தை ⋆
பொங்கி அரி உருவமாய்ப் பிளந்த ⋆
அம்மான் அவனே ⋆
கரி உருவம் கொம்பொசித்தான் காய்ந்து ॥ **65** ॥

காய்ந்திருளை மாற்றிக் ⋆
கதிர் இலகு மா மணிகள் ⋆
ஏய்ந்த பணக் கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப ⋆
வாய்ந்த மது கைடவரும் ⋆
வயிறுருகி மாண்டார் ⋆
அது கேடவர்க்கிறுதி ஆங்கு ॥ **66** ॥

ஆங்கு மலரும் ⋆
குவியுமால் உந்திவாய் ⋆
ஓங்கு கமலத்தின் ஒண் போது ⋆
ஆங்கைத் திகிரி சுடர் என்றும் ⋆

வெண் சங்கம் ⋆
வானில் பகரு மதி என்றும் பார்த்து ॥ **67** ॥

பார்த்த கடுவன் ⋆
சுனை நீர் நிழல் கண்டு ⋆
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து ⋆
கார்த்த களங்கனிக்குக் ⋆
கை நீட்டும் வேங்கடமே ⋆
மேல் நாள் விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு ॥ **68** ॥

வெற்பென்று ⋆
வேங்கடம் பாடும் ⋆
வியன் துழாய்க் கற்பென்று சூடும் ⋆
கருங்குழல் மேல் ⋆
மல் பொன்ற நீண்ட தோள் மால் கிடந்த ⋆
நீள் கடல் நீர் ஆடுவான் ⋆
பூண்ட நாள் எல்லாம் புகும் ॥ **69** ॥

புகு மதத்தால் ⋆
வாய் பூசிக் கீழ் தாழ்ந்து ⋆
அருவி உகு மதத்தால் ⋆
கால் கழுவிக் கையால் ⋆
மிகு மதத் தேன் விண்ட மலர் கொண்டு ⋆
விறல் வேங்கடவனையே ⋆
கண்டு வணங்கும் களிறு ॥ **70** ॥

களிறு முகில் குத்தக் ⋆
கை எடுத்தோடி ⋆
ஒளிறு மருப்பொசி கை யாளி பிளிறி விழ ⋆

கொன்று நின்றதிரும் ⋆
வேங்கடமே ⋆
மேல்நாள் குழக் கன்று கொண்டெறிந்தான் குன்று ॥ **71** ॥

குன்றொன்றின் ஆய ⋆
குற மகளிர் கோல் வளைக் கை ⋆
சென்று விளையாடும் தீங்கழை போய் ⋆
வென்று விளங்கு மதி கோள் விடுக்கும் ⋆
வேங்கடமே ⋆
மேலை இளங்குமரர் கோமான் இடம் ॥ **72** ॥

இடம் வலம் ஏழ் பூண்ட ⋆
இரவித் தேர் ஓட்டி ⋆
வட முக வேங்கடத்து மன்னும் ⋆
குடம் நயந்த கூத்தனாய் நின்றான் ⋆
குரை கழலே கூறுவதே ⋆
நாத்தன்னால் உள்ள நலம் ॥ **73** ॥

நலமே வலிதுகொல் ⋆
நஞ்சூட்டு வன் பேய் ⋆
நிலமே புரண்டு போய் வீழ ⋆
சலமே தான் வெம் கொங்கை உண்டானை ⋆
மீட்டாய்ச்சி ஊட்டுவான் ⋆
தன் கொங்கை வாய் வைத்தாள் சார்ந்து ॥ **74** ॥

சார்ந்தகடு தேய்ப்பத் ⋆
தடாவிய கோட்டுச்சிவாய் ⋆
ஊர்ந்தியங்கும் வெண் மதியின் ஒண் முயலை ⋆
சேர்ந்து சின வேங்கை பார்க்கும் ⋆

திருமலையே ⋆
ஆயன் புன வேங்கை நாறும் பொருப்பு ‖ **75** ‖

பொருப்பிடையே நின்றும் ⋆
புனல் குளித்தும் ⋆
ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா ⋆
விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை ⋆
மெய்ம் மலர் தூய்க் கை தொழுதால் ⋆
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து ‖ **76** ‖

ஆய்ந்த அரு மறையோன் ⋆
நான்முகத்தோன் நன் குறங்கில் ⋆
வாய்ந்த குழவியாய் வாள் அரக்கன் ⋆
ஏய்ந்த முடிப் போது ⋆
மூன்றேழென்றெண்ணினான் ⋆
ஆர்ந்த அடிப் போது நங்கட்கரண் ‖ **77** ‖

அரண் ஆம் நமக்கென்றும் ⋆
ஆழி வலவன் ⋆
முரணாள் வலம் சுழிந்த மொய்ம்பன் ⋆
சரண் ஆமேல் ஏது கதி ஏது நிலை ⋆
ஏது பிறப்பென்னாதே ⋆
ஓது கதி மாயனையே ஓர்த்து ‖ **78** ‖

ஓர்த்த மனத்தராய் ⋆
ஐந்தடக்கி ஆராய்ந்து ⋆
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம் ⋆
கார்த்த விரை ஆர் நறும் துழாய் ⋆

வீங்கோத மேனி ⋆
நிரை ஆர மார்வனையே நின்று ‖ **79** ‖

நின்றெதிராய ⋆
நிரை மணித் தேர் வாணன் தோள் ⋆
ஒன்றிய ஈர் ஐஞ்ஞூறுடன் துணிய ⋆
வென்றிலங்கும் ஆர் படுவான் ⋆
நேமி அரவணையான் ⋆
சேவடிக்கே நேர் படுவான் தான் முயலும் நெஞ்சு ‖ **80** ‖

நெஞ்சால் நினைப்பரியனேலும் ⋆
நிலை பெற்றென் நெஞ்சமே ! பேசாய் ⋆
நினைக்குங்கால் ⋆
நெஞ்சத்துப் பேராது நிற்கும் ⋆
பெருமானை என்கொலோ ⋆
ஓராது நிற்பதுணர்வு ‖ **81** ‖

உணரில் உணர்வரியன் ⋆
உள்ளம் புகுந்து ⋆
புணரிலும் காண்பரியன் உண்மை ⋆
இணர் அணையக் கொங்கணைந்து வண்டறையும் ⋆
தண் துழாய்க் கோமானை ⋆
எங்கணைந்து காண்டும் இனி ‖ **82** ‖

இனியவன் மாயன் ⋆
என உரைப்பரேலும் ⋆
இனியவன் காண்பரியனேலும் ⋆
இனியவன் கள்ளத்தால் மண் கொண்டு ⋆

விண் கடந்த பைங்கழலான் ⋆
உள்ளத்தின் உள்ளே உளன் ॥ **83** ॥

உளனாய ⋆
நான் மறையின் உட்பொருளை ⋆
உள்ளத்துளனாகத் ⋆
தேர்ந்துணர்வரேலும் ⋆
உளனாய வண் தாமரை நெடுங்கண் ⋆
மாயவனை யாவரே ⋆
கண்டார் உகப்பர் கவி ॥ **84** ॥

கவியினார் கை புனைந்து ⋆
கண்ணார் கழல் போய் ⋆
செவியினார் கேள்வியராய்ச் சேர்ந்தார் ⋆
புவியினார் போற்றி உரைக்கப் ⋆
பொலியுமே ⋆
பின்னைக்காய் ஏற்றுயிரை அட்டான் எழில் ॥ **85** ॥

எழில் கொண்டு ⋆
மின்னுக் கொடி எடுத்து ⋆
வேகத் தொழில் கொண்டு ⋆
தான் முழங்கித் தோன்றும் ⋆
எழில் கொண்ட நீர் மேகம் அன்ன ⋆
நெடு மால் நிறம் போல ⋆
கார் வானம் காட்டும் கலந்து ॥ **86** ॥

கலந்து மணி இமைக்கும் கண்ணா ⋆
நின் மேனி மலர்ந்து ⋆
மரகதமே காட்டும் ⋆

நலம் திகழும் கொந்தின் வாய் வண்டறையும் ⋆
தண் துழாய்க் கோமானை ⋆
அந்தி வான் காட்டும் அது ॥ **87** ॥

அது நன்றிது தீதென்று ⋆
ஐயப்படாதே ⋆
மது நின்ற தண் துழாய் மார்வன் ⋆
பொது நின்ற பொன் அம் கழலே ⋆
தொழுமின் ⋆
முழுவினைகள் முன்னம் கழலும் முடிந்து ॥ **88** ॥

முடிந்த பொழுதில் குற வாணர் ⋆
ஏனம் படிந்துழு சால் ⋆
பைந் தினைகள் வித்த ⋆
தடிந்தெழுந்த வேய்ங்கழை போய் ⋆
விண் திறக்கும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு ॥ **89** ॥

சிலம்பும் செறி கழலும் ⋆
சென்றிசைப்ப ⋆
விண் ஆறலம்பிய சேவடி போய் ⋆
அண்டம் புலம்பிய தோள் எண் திசையும் சூழ ⋆
இடம் போதாதென்கொலோ ⋆
வண் துழாய் மால் அளந்த மண் ॥ **90** ॥

மண் உண்டும் ⋆
பேய்ச்சி முலை உண்டும் ஆற்றாதாய் ⋆
வெண்ணெய் விழுங்க வெகுண்டு ⋆
ஆய்ச்சி கண்ணிக் கயிற்றினால் கட்ட ⋆

தான் கட்டுண்டிருந்தான் ⋆
வயிற்றினோடாற்றா மகன் ‖ **91** ‖

மகன் ஒருவர்க்கல்லாத ⋆
மா மேனி மாயன் ⋆
மகன் ஆம் அவன் மகன் தன் காதல் மகனைச் ⋆
சிறை செய்த வாணன் தோள் ⋆
செற்றான் கழலே ⋆
நிறை செய்தென் நெஞ்சே ! நினை ‖ **92** ‖

நினைத்துலகில் ஆர் தெளிவார் ⋆
நீண்ட திருமால் ⋆
அனைத்துலகும் உள் ஒடுக்கி ஆல்மேல் ⋆
கனைத்துலவு வெள்ளத்தோர் பிள்ளையாய் ⋆
மெள்ளத் துயின்றானை ⋆
உள்ளத்தே வை நெஞ்சே ! உய்த்து ‖ **93** ‖

உய்த்துணர்வென்னும் ⋆
ஒளி கொள் விளக்கேற்றி ⋆
வைத்தவனை நாடி வலைப் படுத்தேன் ⋆
மெத்தெனவே நின்றான் இருந்தான் ⋆
கிடந்தான் என் நெஞ்சத்து ⋆
பொன்றாமை மாயன் புகுந்து ‖ **94** ‖

புகுந்திலங்கும் ⋆
அந்திப் பொழுதத்து ⋆
அரியாய் இகழ்ந்த இரணியனதாகம் ⋆
சுகிர்ந்தெங்கும் சிந்தப் பிளந்த ⋆

திருமால் திருவடியே ⋆
வந்தித்தென் நெஞ்சமே ! வாழ்த்து ‖ **95** ‖

வாழ்த்திய வாயராய் ⋆
வானோர் மணி மகுடம் ⋆
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே ⋆
கேழ்த்த அடித் தாமரை ⋆
மலர்மேல் மங்கை மணாளன் ⋆
அடித் தாமரையாம் அலர் ‖ **96** ‖

அலர் எடுத்த உந்தியான் ⋆
ஆங்கெழில் ஆய ⋆
மலர் எடுத்த மா மேனி மாயன் ⋆
அலர் எடுத்த வண்ணத்தான் ⋆
மா மலரான் வார் சடையான் என்று ⋆
இவர்கட்கு எண்ணத்தான் ஆமோ இமை ‖ **97** ‖

இமம் சூழ் மலையும் ⋆
இரு விசும்பும் காற்றும் ⋆
அமஞ்சூழ்ந்தற விளங்கித் தோன்றும் ⋆
நமன் சூழ் நரகத்து ⋆
நம்மை நணுகாமல் காப்பான் ⋆
துரகத்தை வாய் பிளந்தான் தொட்டு ‖ **98** ‖

‡ தொட்ட படை எட்டும் ⋆
தோலாத வென்றியான் ⋆
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று ⋆
குட்டத்துக் கோள் முதலை துஞ்சக் ⋆

குறித்தெறிந்த சக்கரத்தான் ⋆
தாள் முதலே நங்கட்குச் சார்வு ‖ **99** ‖

‡ சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் ⋆
தண் துழாய்த் தார் வாழ் ⋆
வரை மார்பன் தான் முயங்கும் ⋆
கார் ஆர்ந்த வான் அமரு மின் இமைக்கும் ⋆
வண் தாமரை நெடுங்கண் ⋆
தேன் அமரும் பூமேல் திரு ‖ **100** ‖

தசக அடிவரவு — திரு நன்கு பேசுவார் இவை மன்னும் அவனே பண்டு களிறு நெஞ்சால் மண்ணுண்டும் நான்முகன்

மூன்றாம் திருவந்தாதி முற்றிற்று

பேயாழ்வார் திருவடிகளே சரணம்